## திருநின்றவூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை:-திருமதி.ஜீவிதா, B.Sc (Agri).,

ந.க.எண். 481/2025/எப்1 நாள்: 30.03.2026

பொருள்:- மனைப்பிரிவு – திருநின்றவூர் நகராட்சி– திருநின்றவூர் அ கிராமம் – சர்வே எண்.140/4-ல் **2786 ச.மீ** பரப்பளவில் உள்ள குடியிருப்பு மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:-
1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடித எண்.CMDA/PP/Layout-1/0099/2025, நாள்.07.10.2025.
2. ஆவடி சார்பதிவாளர் அவர்கள் அலுவலகத்தில் மனுதாரர் தானமாக சாலை இடத்தினை பதிவு செய்த தானபத்திரம் எண். 14013/2025, நாள்.17.09.2025.
3. நகர் மன்ற தீர்மான எண்-874, நாள் 21.01.2026

*******

**உத்தரவு :-**

திருநின்றவூர் நகராட்சிக்குட்பட்ட திருநின்றவூர் அ கிராமம் சர்வே எண். 140/4-ல் **2786 ச.மீ** நிலப்பரப்பில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வேண்டி M/s. Gruhaanii Developers Pvt Ltd என்பவரால் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி மனுதாரின் விண்ணப்பம் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 1-ல் காணும் கடிதத்தின் படி அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைபடத்தின் படி, சாலை இடத்தினை ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்வை 2-ல் கண்டுள்ளபடி M/s. Gruhaanii Developers Pvt Ltd என்பவர் பத்திரபதிவு செய்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தானமாக ஒப்படைத்துள்ளார்.

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் உத்திரவில் மனைப்பிரிவிற்கு OL-PPD/LO/0171/2025, நாள்.07.10.2025 திட்ட அனுமதி எண். OL-02202 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது

| வ.எண் | கட்டண விவரம் | தொகை ரூ | ரசீது எண்/ நாள் |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு கட்டணம் | ரூ. 1,20,000/- | 0011968/25.03.2026 |
| 2 | ஆய்வு கட்டணம் | ரூ. 30,000/- | 0011969/25.03.2026 |
| 3 | சுற்றுசுவர் | ரூ. 28,000/- | 0011970/25.03.2026 |
| 4 | 5 வருடவைப்பு தொகை | ரூ. 1,00,000/- | 0011971/25.03.2026 |
| 5 | கொடி நாள் | ரூ. 10,000/- | 0011972/25.03.2026 |
| 6 | Lumpsum Amount | ரூ. 30,000/- | 0011973/25.03.2026 |
| 7 | மனை உட்பிரிவு கட்டணம் | ரூ. 1,20,000/- | 0011974/25.03.2026 |
| 8 | திடக்கழிவு மேலாண்மை | ரூ. 40,000/- | 0011975/25.03.2026 |
| 9 | சென்டேஜ் கட்டணம் | ரூ. 40,000/- | 0011976/25.03.2026 |
| 10 | குடிநீர் குழாய் அமைக்க | ரூ. 5,90,000/- | 0011977/25.03.2026 |
| 11 | காலிமனை வரி | ரூ. 1,77,859/- | 0008433 to 0008456/08.01.2026 |

## நிபந்தனைகள்

| | |
|---|---|
| 1 | சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திட்ட அனுமதி எண். OL-02202, நாள்.07.10.2025 -ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும். |
| 2 | இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களில் எக்காரணத்தை கொண்டும் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது. |
| 3 | இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். |
| 4 | மனைப்பிரிவு தொடர்பான இடத்தில் (புல எண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பொறுப்பேற்காது. |
| 5 | தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும். |
| 6 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022-ன் படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்தபின் இவற்றில் எது அதிககாலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/ மனைப்பிரிவு உரிமையாளரைச்சாரும். |

| | |
|---|---|
| 7 | பராமரிப்பு பணிகளுக்கான மீள வழங்கக்கூடிய வைப்புத் தொகையாக ரூ.1.00 இலட்சம் ஒரு ஏக்கருக்கு அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு என கணக்கிட்டு செலுத்தப்படவேண்டும். |
| 8 | பராமரிப்பு காலத்தில் பராமரிப்பு பணிகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளர் மேற்கொள்ள தவறினால் மேற்காணும் பணிகள் உள்ளாட்சி வாயிலாக செய்யப்பட்டு அதற்கான தொகை மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட வைப்பு தொகையிலிருந்து ஈடுசெய்யப்படும். பராமரிப்பு காலம் முடிந்த பின்னர் உரிய ஆய்வுக்கு பின்னர் மீதி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படும். |
| 9 | பேரிடர் காலங்களில் தங்கள் மனைப்பிரிவுகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு இந்நகராட்சி எவ்வித பொறுப்பும் ஏற்காது. |

எனவே, M/s. Gruhaanii Developers Pvt Ltd என்பவருக்கு மேற்கண்ட இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மேற்காணும் நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

30/03/26

ஆணையாளர்
திருநின்றவூர் நகராட்சி

30/03/26

**பெறுநர்:-**

M/S. Gruhaanii Developers Pvt. Ltd.,

No.9, Somasundaram Street ,T.Nagar,

Chennai-600017.

**நகல் பணிந்தனுப்படுகிறது:-**

உறுப்பினர் - செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை.